# தொழில் துறை

# சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022 - 2023

## மானியக் கோரிக்கை எண். 27

# துரைமுருகன்

## நீர்வளத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

# தொழில் துறை

# சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2022-2023

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | புவியியல் மற்றும் சுரங்கத்துறை | 1-42 |
| 2. | தமிழ்நாடு கனிம நிறுவனம் | 43-52 |
| 3. | தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் | 53-59 |

# தொழில் துறை

# சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2022–2023

## 1. புவியியல் மற்றும் சுரங்கத்துறை

கனிமங்கள் பல முக்கிய தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாக பயன்படுவதுடன் மாநிலத்தின் பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு கணிசமாக பங்களிப்பு செய்கிறது. மாநிலத்தின் கனிம வள இருப்பு, அவற்றின் விவேகமான மற்றும் நீடித்த பயன்பாடு போன்றவை அம்மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் பொருளாதார வளமையில் பிரதிபலிக்கின்றன.

கனிம வளங்கள், மீளப்பெற இயலாத வளங்களாக உள்ளதால், எதிர்கால சந்ததியினருக்கு அவற்றை பாதுகாக்கும் பொருட்டு அறிவியல் பூர்வமாக அகழ்ந்தெடுத்தல் மற்றும் பயன்படுத்துதல் அவசியம் என்பதுடன் கனிமம் என்பது பொதுவான வளங்கள் என்பதால் இதன்மூலம் அரசுக்கு உரிய வருவாய் கிடைப்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாடு, தொழிற்சாலை கனிமங்களாகிய லிக்னைட், சுண்ணாம்புக்கல், தாது மணல், சிலிக்கா

மணல், குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பார், கிராபைட், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, மேக்னசைட், இரும்பு தாது, கருப்பு மற்றும் வண்ண கிரானைட் போன்ற சிறுகனிமங்கள், சாதாரண கற்கள் போன்ற பொது உபயோக கனிமங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

மாவட்ட கனிம அறிக்கைகள் இத்துறையால் தயாரிக்கப்பட்டு, மாவட்ட வலைத்தளங்களில் (District Websites) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இக்கனிம அறிக்கைகள் மாவட்டத்தில் கிடைக்கப்பெறும் கனிமங்கள் தொடர்பான விவரங்களை தருவதால் தொழில் முனைவோர் இதனைப் பயன்படுத்தி கனிம உரிமங்களைப் பெறுவதற்கும், கனிம உற்பத்தி செய்வதற்கு உறுதுணையாக உள்ளது.

சுரங்கம் மற்றும் குவாரி பணிகளினால் பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் உள்ள மக்களின் நலனை பாதுகாக்கும் வகையில் உள்கட்டமைப்பு, கல்வி, குடிநீர், சுகாதாரம், துப்புரவு, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலன், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன், திறன் மேம்பாடு, நீர்ப்பாசனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு ஆகிய துறைகளில் ரூபாய் 709.04 கோடி திட்ட மதிப்பீட்டில்

2,454 நலத் திட்டப் பணிகள் மார்ச் 2022 வரை மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியின் மூலம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் கடத்துதல் என்பது சமுதாயத்திற்கு ஒரு பெரிய சவாலாக இருந்து வருகிறது. இதனை கண்காணித்து அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தடுத்திடும் பொருட்டு, ஆளில்லா விமானத் தொழில்நுட்பம், சுரங்கங்களை கண்காணிக்கும் அமைப்பு மற்றும் பறக்கும் படைகள் ஆகியற்றை உருவாக்கி சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்த அரசால் தொடர்ந்து கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கனிமங்களை சட்டவிரோதமாக வெட்டியெடுப்பதற்கு எதிராக மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிகளின் காரணமாக கனிம வருவாய் குறிப்பிடத் தக்க வகையில் அதிகரித்துள்ளது. 2020–21ஆம் நிதியாண்டில் ரூபாய் 983 கோடியாக இருந்த கனிம வருவாய் மார்ச் 2022 வரை ரூபாய் 1179.21 கோடியாக அதிகரித்துள்ளது.

இந்திய புவியியல் ஆய்வுத் துறை (GSI), இந்திய கனிம ஆய்வு கழகம் (MECL), குதிரைமுக் இரும்புத்தாது கழகம் (KIOCL) உள்ளிட்ட கனிம ஆய்வு நிறுவனங்கள் சுண்ணாம்புக்கல், டியுனைட், இரும்புத்தாது, கிராபைட்,

பிளாட்டினம் தொகுப்பு கனிமங்கள் மற்றும் மாலிப்டினம் ஆகிய கனிமங்களுக்கான ஆய்வுகள் மேற்கொண்டு ஆய்வறிக்கைகளை சமர்பித்துள்ளன.

மாநிலத்தில் முதல் முறையாக எட்டு சுண்ணாம்புக்கல் கனிம தொகுதிகள் மற்றும் ஐந்து ஒருங்கிணைந்த உரிமங்களுக்கான தொகுதிகளை, திருத்திய கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் சட்டம், 2015–ன்படி, ஏலத்திற்கு கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஏலதாரர்களிடமிருந்து முன் கட்டணமாக கணிசமான வருவாய் அரசுக்கு கிடைக்கப்பெறும்.

மாநிலத்தில் கிரானைட் தொழிலுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கில் கிரானைட் கனிமங்களை கொண்ட அரசு நிலங்களை பொது ஏலத்திற்கு கொண்டுவர அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 1.1 நோக்கம் மற்றும் குறிக்கோள்

"கனிம மேலாண்மையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்குதல்" என்பது இத்துறையின் நோக்கமாகவும் மற்றும் "தொழில், சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்களுக்கு உகந்த கனிம கொள்கையின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக

கனிமங்களை அகழ்ந்து எடுத்தல், முறையான கனிம உற்பத்தி, கனிமங்களை பேணி பாதுகாத்தல் மற்றும் கனிம வருவாயினை அதிகரித்தல்" என்பது இத்துறையின் குறிக்கோளாகவும் உள்ளன.

## 1.2 குறிக்கோள்

i. சுற்றுச்சூழலுக்கு உகந்த நவீன தொழில்நுட்பங்களை கனிம ஆய்வுகள் மற்றும் கனிமங்கள் வெட்டியெடுத்தல் பணிகளுக்கு பயன்படுத்துதல்.

ii. சிறந்த செயல்திறன் மிக்க கனிமவள நிர்வாகத்தின் மூலம் கனிம வருவாயை பெருக்குதல்.

iii. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

iv. உரிய தொழில்நுட்பங்களைக் கொண்டு கடும் நடவடிக்கை எடுப்பதன் மூலம் சட்ட விரோதமாக கனிமங்களை வெட்டி எடுப்பது மற்றும் கொண்டு செல்வதை தடுத்தல்.

v. மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியினை பயன்படுத்தி குடிநீர் வழங்கல், சுகாதாரம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலம், உள் கட்டமைப்பு, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்று திறனாளிகள் நலன், துப்புரவு,

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு, திறன்மேம்பாடு, நீர்பாசனம் மற்றும் நீர்வடிப்பகுதி மேம்பாடு போன்ற நலத்திட்டங்களை சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்துதல்.

## 1.3 பணிகள்

i. இத்துறையானது இந்திய புவியியல் ஆய்வுத் துறை (GSI), இந்திய கனிம ஆய்வு கழகம் (MECL), குதிரைமுக் இரும்புத்தாது கழகம் (KIOCL), தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (TANCEM), தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (TANMAG) மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) ஆகியவற்றின் உதவியுடன் புதிய கனிம படிமங்களை கண்டறிந்து வருகிறது.

ii. கனிம உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கில் இத்துறையானது பொதுத்துறை நிறுவனங்களான டாமின், டான்செம், டான்மேக், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம் இந்தியா லிமிடெட், (NLCIL) இந்திய அருமணல் லிமிடெட் (IREL) மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கனிமங்களை வெட்டியெடுக்க குத்தகை அனுமதியினை

வழங்கி வருகிறது. இதன் மூலம் பெருங்கனிமங்களுக்கான ராயல்டி, வருடாந்திர இழப்பீடு, முடக்குவரி மற்றும் சிறுகனிமங்களுக்கான உரிமத்தொகை, முடக்குவரி, பரப்புவரி, செங்கல் உற்பத்திக்கான ஆண்டு கனிமக் கட்டணம் ஆகியவை குத்தகைதாரர்களிடம் இருந்து வசூல் செய்யப்படுகிறது.

iii. சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் கொண்டு செல்லுதலை தடுக்க, சேலம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மண்டலங்களில் இயங்கி வரும் பறக்கும் படைகள், சுரங்கப் பகுதிகள் மற்றும் கனிமங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை தொடர் சோதனைகளுக்கு உட்படுத்தி வருகிறது.

iv. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மற்றும் நீலகிரி மாவட்டம் ஆகியவை பருவமழை காலங்களில் நிலச்சரிவுகள் ஏற்படும் வாய்ப்புள்ள பகுதிகளாக உள்ளன. இம்மாவட்டங்களில் உள்ள புவிதொழில்நுட்ப மையங்கள்

(Geotechnical Cells) மலைப்பகுதிகளில் பலவீனமான பகுதிகளை கண்டறிந்து அவற்றினை வரைபடங்களில் குறியீடு செய்து வருகிறது. மேலும், இம்மையங்கள் இயற்கை பேரழிவுகளை தவிர்க்க தேவையான தொழில்நுட்ப பாதுகாப்பு ஆலோசனைகளை மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கி வருகிறது. இவை தவிர, இம்மையங்கள் பொதுமக்கள் மற்றும் அரசு நிறுவனங்களிடமிருந்து கட்டுமானங்கள் மேற்கொள்ள பெறப்படும் விண்ணப்பங்களை தகுதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்து தொழில்நுட்ப சாத்தியக்கூறு மதிப்பீட்டு அறிக்கை வழங்கி வருகிறது.

## 1.4 நடைமுறையிலுள்ள பெருங்கனிம / சிறுகனிம குத்தகை விவரங்கள்

| கனிமங்கள் | நடைமுறையிலுள்ள குத்தகைகளின் எண்ணிக்கை | பரப்பு (ஹெக்டேர்) |
|---|---|---|
| **I. பெருங்கனிமம்** | | |
| 1. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு | 13 | 24378.00.0 |
| 2. பழுப்பு நிலக்கரி | 1 | 25900.00.0 |
| 3. சுண்ணாம்புக்கல் | 57 | 3380.96.0 |
| 4. மேக்னசைட் | 2 | 80.28.5 |
| 5. வெர்மிகுலைட் | 1 | 23.70.5 |
| 6. கிராபைட் | 1 | 237.39.5 |
| 7. தாது மணல் | 2 | 148.28.7 |
| **மொத்தம்** | **77** | **54148.63.2** |
| **II. சிறுவகை கனிமம்** | | |
| 1. பல வண்ண கிரானைட் | 83 | 184.52.2 |
| 2. கருப்பு கிரானைட் | 27 | 151.94.4 |
| 3. சாதாரண கற்கள் | 1353 | 2646.07.1 |
| 4. கிராவல் | 45 | 101.27.6 |
| 5. மண் | 20 | 69.09.7 |
| 6. கூழாங்கற்கள் | 4 | 5.50.5 |
| 7. குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பார் | 13 | 25.24.6 |
| 8. லைம்கன்கர் | 7 | 711.18.9 |
| 9. தீக்களிமண் | 5 | 17.31.0 |
| 10. சிலிக்கா மணல் | 1 | 2.77.0 |
| 11. கால்சைட் | 1 | 1.94.5 |
| **மொத்தம்** | **1559** | **3916.87.5** |
| **ஆக மொத்தம்** | **1636** | **58065.50.7** |

## 1.5 கனிமவளம், உற்பத்தி மற்றும் வருவாய்

பெருங்கனிமங்கள், சிறுகனிமங்கள், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கனிமங்களை தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கனிமங்கள் தொடர்பான விபரங்கள் கீழ்கண்டவாறு:

### (அ) பெருங்கனிமங்கள்

#### (i) சுண்ணாம்புக்கல்



இது சுண்ணாம்பு பவுடர், சிமெண்ட், இரசாயனங்கள், உரங்கள் ஆகிய உற்பத்தியிலும் மற்றும் உலோகத் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது. சுண்ணாம்புக்கல் இரண்டு வகைப்படும். அவை (அ) படிக சுண்ணாம்புக்கல்: இவை சேலம், திருச்சிராப்பள்ளி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கிடைக்கின்றன. இதன் மொத்த இருப்பு 200 மில்லியன் டன் என கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) படிவ அல்லது தொல்லுயிர் சுண்ணாம்புக்கல்: இக்கனிமம், அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும்



தூத்துக்குடி மாவட்டங்களில் கிடைக்கின்றன. தொல்லுயிர் சுண்ணாம்புக்கல்லின் மொத்த இருப்பு 670 மில்லியன் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. சுண்ணாம்புக் கல்லினை வெட்டியெடுக்க 57 குத்தகைகள் 3380.96.0 ஹெக்டேர் பரப்பளவிற்கு வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

### (ii) மார்ல்

மார்ல், சிமெண்ட் மற்றும் உரங்கள் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது.



இக்கனிமமானது கடல் சூழல் தன்மையின் கீழ் உருவாகி தொல்லுயிர் சுண்ணாம்புக்கல் கனிமத்துடன் சேர்ந்து அரியலூர் மாவட்டத்தில் கிடைக்கிறது. இக்கனிமம் நடைமுறையிலுள்ள 5 சுண்ணாம்புக்கல் சுரங்கக் குத்தகைகளுடன் 174.38.0 ஹெக்டேர் பரப்பில் வெட்டியெடுக்கப்படுகிறது.

### (iii) மாலிப்டினம்

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் இந்திய கனிம ஆய்வு

கழகத்தினரால் மாலிப்டினம் கனிம இருப்பு கண்டறியப்பட்டுள்ளது. மாலிப்டினம் கனிம இருப்பானது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 0.699 மில்லியன் டன் எனவும், தருமபுரி மாவட்டத்தில் 8.350 மில்லியன் டன் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஒன்றிய அரசிடமிருந்து மாலிப்டினம் கனிமத்தின் சந்தை மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. ராயல்டி தொகை விவரம் ஒன்றிய சுரங்க அமைச்சகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. இம்முக்கிய கனிம தொகுப்புகள் பொது ஏலத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

(iv) பாக்சைட்

பாக்சைட் தாதுவிலிருந்து அலுமினிய உலோகம் பிரித்தெடுக்கப்படுகிறது. பாக்சைட் கனிமம் வெப்பம் தாங்கி கற்கள், சிமெண்ட், இரசாயனங்கள் மற்றும் வண்ணம் தயாரிக்கும்



தொழிற்சாலைகளிலும் மற்றும் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலைகளிலும் பயன்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலை மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள

கொல்லிமலை ஆகிய பகுதிகளில் தரமான பாக்சைட் கனிம படிவுகள் காணப்படுகின்றன. ஐந்து குத்தகைககள் 421.04.2 ஹெக்டேர் பரப்பளவில் வழங்கப்பட்டு உள்ளன.

(v) **மேக்னசைட்**

இது மெக்னீசியம் கார்ப்பனேட் கனிமமாகும். இவை உருக்காலையில் இளக்கியாகவும், வெப்பந்தாங்கி கற்கள், வெப்ப கட்டுப்படுத்தி, பீங்கான் தடுப்பான் மற்றும் உராய்வு பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.



உலகில் உள்ள சிறந்த மேக்னசைட் கனிமங்கள் கிடைக்கப்பெறும் இடங்களில் சேலம் மாவட்டத்தில் உள்ள சுண்ணாம்பு மலையும் ஒன்றாகும். இதன் கனிம இருப்பு 40.5 மில்லியன் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க 80.28.5 ஹெக்டேர் பரப்பளவில் 2 குத்தகைகள் நடைமுறையில் உள்ளது.

(vi) கிராஃபைட்

இயற்கையிலேயே கிடைக்கும் இப்படிக நிலை கார்பன், உலோக உலை, மின்தடுப்பான், எலக்ரோடு, அணுஉலை மற்றும் வார்ப்பாலை ஆகிய தொழிற்சாலைகளில் பயன்படுகிறது.



கிராஃபைட் கனிமம் சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டங்களில் கிடைக்கிறது. டாமின் நிறுவனம் சிவகங்கை மாவட்டத்திலுள்ள பூவந்தி கிராமத்தில் 237.39.5 ஹெக்டேர் பரப்பில் இக்கனிமத்தினை சுரங்கப் பணிகள் மூலம் வெட்டியெடுத்து வருகிறது.

(vii) வெர்மிகுலைட்

இது மஞ்சள் பழுப்பு நிறத்துடன் கூடிய



மைக்கா வகையைச் சேர்ந்த கனிமமாகும். இவை மின்தடுப்பானகவும் மற்றும் வெர்மிடைல்ஸ் தயாரிக்கவும் பயன்படுகிறது. திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள செவத்தூர் கிராமத்தில் டாமின் நிறுவனம் 23.70.5 ஹெக்டேர் பரப்பில்

இக்கனிமத்தினை குவாரிகள் மூலம் உற்பத்தி செய்து வருகிறது.

(viii) பழுப்பு நிலக்கரி

இது எரிபொருள் வகையைச் சார்ந்த கனிமமாகும். இக்கனிமம் நெய்வேலி, மன்னார்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் கிடைக்கிறது. இக்கனிமத்தின் மொத்த இருப்பு 34,764 மில்லியன் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரி இந்திய நிறுவனம் (NLCIL) கடலூர் மாவட்டத்தில் உள்ள நெய்வேலியில் 25,900 ஹெக்டெர் பரப்பில் இக்கனிமத்தினை குவாரிகள் மூலம் பிரித்தெடுக்கும் பணிகளை செய்து வருகிறது.



(ix) அணுவகை கனிமங்கள்

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள தாது மணலில் அணு வகை கனிமங்களான மோனோசைட், கார்னெட், இல்மனைட், ரூடைல், சிலிமனைட், சிர்கான் மற்றும் லூக்காக்சி ஆகியவை கிடைக்கின்றன. தாது மணல் உராய்வு பொருட்களாகவும்,

குறைகடத்திகளாகவும் மற்றும் அனு உலைகளிலும் பயன்படுகிறது. இக்கனிமங்களை, இந்திய அருமணல் கழகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் குவாரிகள் மூலம் உற்பத்தி செய்து வருகிறது. கார்னெட் கனிமமானது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் படிவு நிலையிலும் மற்றும் மதுரை மாவட்டத்தில் பாறைகளிலும் கிடைக்கின்றன.

| | | |
|---|---|---|
| <br>இல்மனைட் | <br>சிர்கான் | <br>மோனோசைட் |
| <br>ரூட்டைல் | <br>கார்னெட் | <br>சிலிமனைட் |

ஒன்றிய அரசின் சுரங்க அமைச்சகம் 01.03.2019 நாளிட்ட ஆணையில் தாது மணல் மற்றும் இதர இடங்களில் கிடைக்கும் அணுசக்திவகை கனிம மணலில் உள்ள மோனோசைட் கனிமத்தின் செறிவினை 0.00% என நிர்ணயம் செய்துள்ளது.

எனவே, இனிவரும் காலங்களில் அணுசக்திவகை கனிமங்களின் சுரங்க குத்தகையானது அணுசக்தி கனிமங்களின் சலுகை விதிகள் 2016–ன்படி அரசு நிறுவனம் அல்லது அரசிற்கு சொந்தமான அல்லது அரசு கட்டுப்பாட்டிலுள்ள பொது நிறுவனம் ஆகியவற்றிற்கு மட்டுமே வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்கனிமத்தினை பிரித்தெடுக்க 148.28.7 ஹெக்டேர் பரப்பளவில் இந்திய அருமணல் நிறுவனத்திற்கு 2 குத்தகைகள் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**(ஆ) சிறுகனிமங்கள்**

**(i) கிரானைட்**



செறிவு மிக்க கிரானைட் இருப்புகள் தமிழகத்தில் காணப்பெறுகின்றன. வெட்டி மெருகூட்ட தகுதி வாய்ந்த கடினமான படிக வகைப் பாறைகள் கிரானைட் என அழைக்கப்படுகிறது. 1970–களிலிருந்து இந்தியளவில் கிரானைட் உற்பத்தியில் தமிழகம் முன்னோடியாக திகழ்கிறது.



கிரானைட் கற்களை பல்வேறு அளவுகளில் நினைவுச் சின்னங்களாகவும்,

ஓடுகளாகவும் வெட்டி மெருகூட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் கணிசமான அந்நிய செலாவணியை அரசுக்கு ஈட்டித் தருகிறது. கருப்பு நிற கிரானைட் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் கிடைக்கிறது. பலவண்ண கிரானைட் கிருஷ்ணகிரி, மதுரை, விருதுநகர், சேலம் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கிடைக்கின்றது. குன்னம் பிளாக், ஜீப்ரா ஒயிட், பாரடைசோ, ரெட்வேவ், டைகர்ஸ்கின், டெசர்ட் பிரவுன் மற்றும் காஷ்மீர் ஒயிட் ஆகியவை வணிக ரீதியாக தமிழகத்தில் கிடைக்கும் மிகவும் புகழ் பெற்ற கிரானைட் வகைகளாகும். இக்கனிமத்தை சுரங்க பணிகள் மூலம் வெட்டியெடுக்க தமிழ்நாட்டில் 336.46.6 ஹெக்டேர் பரப்பில் 27 கருப்பு கிரானைட் மற்றும் 83 பல வண்ண கிரானைட் குத்தகைகள் இயங்கிவருகின்றன.

**(ii) ஜிப்சம்**



இக்கனிமம் பிளாஸ்டர் ஆப் பாரீஸ் தயாரிப்பிலும் மற்றும் சிமெண்ட், உரம்,

பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது. இக்கனிமத்தினை குவாரி செய்வதற்கு கோயம்புத்தூர், பெரம்பலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 16.46.0 ஹெக்டேர் பரப்பில் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(iii) தீக்களிமண்**

இக்களிமண் வெப்பந்தாங்கி கற்கள், பீங்கான் பொருட்கள் மற்றும் அலங்கார ஓடுகள் தயாரிக்கவும் சிமெண்ட் தொழிற்சாலைகளிலும் முக்கிய மூலப்பொருளாக பயன்படுகிறது. இது அரியலூர், பெரம்பலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கிடைக்கின்றது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க 17.31.0 ஹெக்டேர் பரப்பில் 5 குத்தகைகள் இயங்கிவருகின்றன.



**(iv) சோப்ஸ்டோன்**

இக்கனிமம் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் கிடைக்கின்றது. இக்கனிமம்



டால்கம் பவுடர் மற்றும் அலங்காரப் பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 3.28.5 ஹெக்டேர் பரப்பில் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(v) குவார்ட்ஸ் & பெல்ஸ்ஃபார்**

இக்கனிமங்கள் சேலம், கரூர், திண்டுக்கல்,




நாமக்கல், திருப்பூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் கிடைக்கின்றன. இவை கண்ணாடி, வெப்பந்தாங்கி கற்கள், வார்ப்பாலை, பீங்கான், மின்சாதனம், உராய்ப்பான் மற்றும் வண்ணத் தொழிற்சாலைகளில் முக்கிய மூலப்பொருளாக பயன்படுகிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க மேற்கண்ட மாவட்டங்களில் 25.24.6 ஹெக்டேர் பரப்பில் 13 குத்தகைகள் இயங்கிவருகின்றன.




**(vi) சிலிக்காமணல்**




இக்கனிமம் கண்ணாடி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும்

வார்ப்பாலைகளில் வினையூக்கிகளாகப் பயன்படுகிறது. இது விழுப்புரம், நாகப்பட்டினம், செங்கல்பட்டு மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் கிடைக்கிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க செங்கல்பட்டு மாவட்டத்தில் 2.77.0 ஹெக்டேர் பரப்பில் ஒரு குத்தகை நடைமுறையில் உள்ளது.

**(இ) எண்ணெய் கனிமம்**

**எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு**

எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் (ONGC) கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம்,




புதுக்கோட்டை, மயிலாடுதுறை, அரியலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவினை உற்பத்தி செய்து வருகிறது.




**(ஈ) கனிம உற்பத்தி**

தமிழ்நாட்டில் ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை உற்பத்தி செய்யப்பட்ட பெருங்கனிமங்கள், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் சிறு கனிமங்கள் பற்றிய விபரங்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

## (I) பெருங்கனிமங்களின் உற்பத்தி

| வ. எண் | கனிமங்கள் | உற்பத்தி (மெட்ரிக்டன்னில்) | வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | பழுப்பு நிலக்கரி | 2,36,26,296 | 296.00 |
| 2. | சுண்ணாம்புக்கல் | 2,04,56,860 | 171.52 |
| 3. | மேக்னசைட் | 48,349 | 0.62 |
| 4. | வெர்மிகுலைட் | 670 | 0.01 |
| 5. | கிராபைட் | 49,233 | 0.12 |
| 6. | மால் | 6,30,141 | 4.23 |
| 7. | கார்னெட் | 3,952 | 0.24 |
| 8. | இல்மனைட் | 60,154 | 2.63 |
| 9. | ரூட்டைல் | 1,959 | 0.45 |
| 10. | ஜிர்கான் | 4,328 | 0.97 |
| 11. | மோனசைட் | 2,030 | 0.02 |
| | **மொத்தம்** | **4,48,83,972** | **476.81** |

## (II) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி


| வ. எண். | கனிமங்கள் | உற்பத்தி | வருவாய் (ரூபாய் கோடியில் ) |
|---|---|---|---|
| 1. | கச்சா எண்ணெய் | 3,66,319 மெ.டன் | 223.41 |
| 2. | இயற்கை எரிவாயு | 101,91,92,017 க.மீ. | 66.54 |
| | | **மொத்தம்** | **289.95** |

## (III) சிறுகனிமங்களின் உற்பத்தி


| வ. எண். | கனிமங்கள் | உற்பத்தி | வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | பல வண்ண கிரானைட் (க.மீ) | 1,03,970 | 22.93 |
| 2. | கருப்பு கிரானைட் (க.மீ) | 21,064 | 9.01 |
| 3. | சாதாரண கற்கள்(க.மீ) | 3,99,81,625 | 212.47 |
| 4. | கிராவல் (க.மீ) | 58,84,820 | 23.91 |
| 5. | மண் (க.மீ) | 24,84,349 | 16.21 |
| 6. | கூழாங்கற்கள் (க.மீ) | 14,946 | 0.4 |
| 7. | குவார்ட்ஸ் (மெ.டன்) | 14,323 | 0.25 |
| 8. | பெல்ஸ்பார் (மெ.டன்) | 73,330 | 0.73 |
| 9. | சிலிக்கா மணல் (மெ.டன்) | 2,900 | 0.04 |
| 10 | லைம்கன்கர் (மெ.டன்) | 2,56,930 | 2.18 |
| 11 | தீக்களிமண் (மெ.டன்) | 2,54,370 | 0.78 |
| 12 | கால்சைட் (மெ.டன்) | 1,890 | 0.01 |
| 13 | குவார்ட்ஸ்சைட் (மெ.டன்) | 225 | 0.002 |
| 14 | களிமண்(மெ.டன்) | 35,000 | 0.07 |
| மொத்தம் | | 4,91,29,742 | 288.99 |

### (உ) கனிம வருவாய்

கனிம உற்பத்தியின் மூலம் 2020-2021 நிதியாண்டில் ரூ.983 கோடி ஈட்டப்பட்டுள்ளது. 2021-22 நிதியாண்டில் ரூ.1179.21 கோடி கனிம வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பெருங்கனிமங்கள், சிறுகனிமங்கள் மற்றும் எண்ணெய் கனிமங்களின் வருவாய் பங்களிப்பு கீழே வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.




கடந்த ஆறு நிதியாண்டுகளில் எய்தப்பட்ட வருவாய் விபரம் கீழ்கண்டவாறு




இத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட முனைப்பான தடுப்பு நடவடிக்கையின் காரணமாக, இந்நிதியாண்டில் மார்ச் 2022 வரை உரிய

அனுமதியின்றி கனிமங்களை கடத்திய 9,363 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அபராதமாக ரூ.1.13 கோடி விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 6,806 குற்றவியல் வழக்குகள் / முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கனிம கடத்தலில் தொடர்ந்து ஈடுபடும் 19 நபர்கள் மீது குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 1.6 தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளை

தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளையானது 2015 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பெருங்கனிம குத்தகைதாரர்கள் அரசுக்கு செலுத்தும் ராயல்டி தொகையில், 2% தொகையினை இந்நிதிக்காக செலுத்தி வருகிறார்கள். இவ்வறக்கட்டளைக்கு 31.03.2022 வரை ரூபாய் 66.15 கோடி நிதியாக பெறப்பட்டுள்ளது.

இந்நிதியானது விரிவான கனிம ஆய்வுகளை, கனிம மண்டலங்களில் காணப்படும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கனிமங்களை, மேம்பட்ட அறிவியல் தொழில்நுட்பங்கள், புவிஇயற்பியல், புவிஇரசாயனம்,



வான்வெளி கனிம ஆய்வு ஆகிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி தொலைநோக்கு பார்வையில் அகழாய்வு செய்யவும் திறன் மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் 655 ஹெக்டேர் பரப்பில் 5 சுண்ணாம்புக்கல் தொகுப்புகளில் ரூபாய் 6.55 கோடி செலவில் 2019ஆம் ஆண்டில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் 4 சுண்ணாம்புக்கல் தொகுப்புகளில் மத்திய கனிம ஆய்வுக் கழகமும், 3 சுண்ணாம்புக்கல் தொகுப்புகளில் குதிரைமுக் இரும்புத்தாது கழகமும் கனிம அகழாய்வு பணிகளை மேற்கொண்டு ஆய்வறிக்கை அளித்துள்ளது. இந்திய புவியியல் ஆய்வு துறை ஒரு சுண்ணாம்புக்கல் கனிம தொகுதியில் ஆய்வுகள் மேற்கொண்டு ஆய்வறிக்கை அளித்துள்ளது. மேற்கண்ட 8 சுண்ணாம்புக்கல் தொகுதிகளை ஏலத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்திய புவியியல் ஆய்வு நிறுவனம் 4 சுண்ணாம்புக்கல் கனிம தொகுதிகள் மற்றும் ஒரு கிராபைட் கனிம தொகுதிக்கான ஜி4 நிலையிலான ஆய்வறிக்கைகள் வழங்கியுள்ளது. இந்த 5 தொகுதிகளுக்கு ஏலமுறையில் ஒருங்கிணைந்த

உரிமங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.7 மாவட்டக் கனிம அறக்கட்டளை

சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் 2017 ஆம் ஆண்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிறுவப்பட்டது. 12.01.2015 தேதிக்கு முன் உரிமம் பெற்ற பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களைச் சார்ந்த சுரங்கக் குத்தகைதாரர்கள் அரசுக்குச் செலுத்தும் ராயல்டி அல்லது உரிமக்கட்டணத் தொகையில் 30 சதவீதமும், மற்றும் அதற்குப் பின்னர் உரிமம் பெற்றவர்கள் 10 சதவீதமும் மாவட்ட கனிம அறக்கட்டளைக்கு செலுத்தி வருகிறார்கள். இந்நிதியானது, பிரதம மந்திரி கனிஜ் ஷேத்ர கல்யாண் யோஜனா (PMKKKY) மற்றும் இதர நலத்திட்டங்கள் மூலம் குவாரிகளினால் பாதிப்பிற்குள்ளான பகுதிகள் மற்றும் மக்களின் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வறக்கட்டளை தொடங்கிய 2017–ம் ஆண்டிலிருந்து 31 மார்ச் 2022 வரை சுரங்கம் மற்றும் குவாரி குத்தகைதாரர்களால் ரூபாய் 1027.29 கோடி மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியாக செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிதியில் குறைந்தபட்சமாக 60 சதவீத நிதியை உயர்முக்கியத்துவம் வாய்ந்த துறைகளான சுகாதாரம், குடிநீர் வழங்குதல், கல்வி, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம், வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன், திறம் மேம்பாடு, உள்கட்டமைப்பு, துப்புறவு பணிகள், சுற்றுச்சூழல் பாதுகாத்தல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.


எஞ்சிய தொகை இதர முக்கியத்துவம் வாய்ந்த துறைகளான நீர்ப்பாசன மேம்பாடு, எரிசக்தி, நீர்வடி பகுதி மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாத்தல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிதியிலிருந்து 31.03.2022 வரை 2,454 திட்டங்கள் ரூபாய் 709.04 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதில், 1,635 திட்டங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. உயர் முக்கியத்துவம் மற்றும் இதர முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களின் கீழ் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் திட்டமதிப்பீடு தொடர்பான

விவரங்கள் கீழ்க்கண்டவாறு வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன:


**(i) உயர்முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்**

| வ. எண் | துறைகள் | திட்டங்களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (கோடியில்) |
|---|---|---|---|
| 1 | உள்கட்டமைப்பு | 641 | 160.42 |
| 2 | சுகாதாரம் | 557 | 59.00 |
| 3 | குடிநீர் வழங்குதல் | 424 | 264.02 |
| 4 | கல்வி | 366 | 30.24 |
| 5 | துப்புரவு பணிகள் | 159 | 11.15 |
| 6 | வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் நலன் | 106 | 1.44 |
| 7 | பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் | 62 | 5.38 |
| 8 | திறன் மேம்பாடு | 22 | 2.89 |
| 9 | சுற்றுசூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு | 20 | 4.89 |
| | **மொத்தம்** | **2,357** | **539.43** |




## (ii) இதர முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

| வ. எண் | துறைகள் | திட்டங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (கோடியில்) |
|---|---|---|---|
| 1 | நீர்பாசன மேம்பாடு | 44 | 154.52 |
| 2 | எரிசக்தி மற்றும் நீர்வடி பகுதி மேலாண்மை | 41 | 12.36 |
| 3 | மற்றவை | 12 | 2.73 |
| | **மொத்தம்** | 97 | 169.61 |
| | **ஆக மொத்தம்** | 2,454 | 709.04 |




## 1.8 புதிய முயற்சிகள்

### 1.8.1. பசுமை நிதியம்

23.02.2022 நாளிட்ட அரசாணையில், 1959 ஆண்டைய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில், புதிய விதி 35-A சேர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பயனற்ற குவாரிகளை மீட்டெடுத்தல், மறுசீரமைத்தல் மற்றும் புனரமைத்தலுக்கு ஏதுவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் பசுமை நிதி அமைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைத்து கனிமங்களின் ஆய்வு



உரிமம் / குத்தகை உரிமையாளர்கள் சுரங்க / குவாரி பணியின் போது உரிமத் தொகையுடன் கூடுதலாக 10 சதவீத

உரிமத்தொகையினை பசுமை நிதியாக பங்களிக்க வேண்டும். மேலும், வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும் போது உரிமத்தொகையுடன் கூடுதலாக 20 சதவீத உரிமத்தொகையினை பசுமை நிதியாக பங்களிக்க வேண்டும். 31.03.2022 வரை ரூபாய் 21.73 இலட்சம் பசுமை நிதியாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

**1.8.2. 436 பயனற்ற பழைய சுரங்கம் மற்றும் குவாரிகளை பொதுமக்களுக்குப் பயனுள்ள அமைப்புகளாக மாற்றுதல்**

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் 2021ஆம் ஆண்டு அறிவிப்பின்படி தமிழ் நாடு குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் / உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து 436 பயனற்ற பழைய கல் குவாரிகளை மழைநீர் சேகரிப்பு மையங்களாக மாற்றி பொது மக்களுக்கு பயன்படும் வகையில் நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**1.8.3 விதிமுறைகளுக்கு புறம்பாக கனிமங்கள் எடுப்பதை தடுக்க ஆளில்லா சிறிய ரக விமானத்தை பயன்படுத்துதல்.**

குத்தகைப் பகுதிகளில் விதிமுறைகளுக்கு புறம்பாக கனிமங்கள் எடுப்பதை தடுக்க ஆளில்லா சிறிய ரக விமானத்தை பயன்படுத்தும் தொழில் நுட்பம்

ஆண்டுக்கு ரூபாய் 25 கோடியில் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் குத்தகைப் பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் குத்தகை பரப்பிற்கு வெளியே குவாரிப் பணி மேற்கொள்ளப்படுவதை ஆளில்லா விமான தொழில் நுட்பத்தின் மூலம் கண்காணித்து, வெட்டியெடுக்கப்பட்ட கனிமத்தின் கனபரிமாணங்களை அளவீடு செய்து சம்மந்தப்பட்ட



குத்தகைதாரரிடமிருந்து கனிம மதிப்பினை வசூல் செய்யவும் மற்றும் சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவும் இயலும்.

இத்தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதற்கு 2020-2021 நிதியாண்டில் ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக சென்னை அண்ணா பல்கலைக் கழகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, தேனி மாவட்டத்தில் 54 கற்குவாரிகளில் கனிமங்கள் வெட்டியெடுத்துச் செல்லப்பட்டது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும், இத்தொழில்நுட்பத்தை மாநிலம் முழுவதும் நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாவட்டங்களில் உள்ள கனிம இருப்பு உட்பட குவாரிகளின் நிலை

குறித்து அறிந்து கொள்ளவும், வருடத்திற்கு இருமுறை இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அரசுக்கு சேரவேண்டிய வருவாயினை காலதாமதமின்றி வசூலிக்கப்படுவதற்கும் உபயோகமாக அமையும்.

### 1.8.4 வரலாற்றுச் சின்னங்கள், பழந்தமிழர் கல்வெட்டுகள், சமணப்படுகை மற்றும் தொல்பொருள் தலங்கள் பாதுகாத்தல்.

குவாரி மற்றும் சுரங்கங்களிலிருந்து தொல் பொருள் தலங்கள் மற்றும் நினைவு சின்னங்களுக்கு 500 மீட்டர் பாதுகாப்பு இடைவெளியாகவும், சரணாலயங்கள், தேசிய பூங்கா, யானை வழி தடங்கள் மற்றும் காப்பு காடுகளுக்கு ஒரு கிலோ மீட்டர் அல்லது மத்திய சுற்றுசூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் தூரம் இவற்றில் எது அதிகமோ, அதனை பாதுகாப்பு இடைவெளியாக கடைப்பிடிக்கும் வகையில் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள், 1959–ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள வரலாற்றுச் சின்னங்கள், பழந்தமிழர்



கல்வெட்டுகள், சமணர்படுகைகள் மற்றும் தொல்பொருள் தலங்கள் அதீத சுரங்கப் பணிகளிலிருந்து பாதுகாக்கப்படும்.

### 1.8.5 கிரானைட் கழிவுக் கற்களை அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில் பயன்பாட்டுக்குக் கொண்டு வருதல்

கிரானைட் குவாரிகளில், கிரானைட் கற்களை வெட்டியெடுக்கும் போது கிடைக்கப்பெறும் கிரானைட் கழிவுகள் எவ்வித பயன்பாடுமின்றி குவாரிப் பகுதிகளில் குவித்து வைக்கப்பட்டு பல்வேறு காலநிலை மாற்றங்களால் அதனுடைய தரம் குறைந்து வருகிறது. தற்போது எம்–சாண்ட் தயாரிப்பு, சாலைப் பணிகள் மற்றும் இதர உபயோகங்களுக்கு கிரானைட் கழிவுகளுக்கான தேவை அதிகரித்துள்ளது.

இதற்காக தற்போதைய கனிம விதிகளில் புதிய திருத்தங்கள் மேற்கொண்டு டன்கள் அடிப்படையில் உரிய சீனியரேஜ் தொகை வசூலித்து எம்–சாண்ட் தயாரிப்பு, சாலைப் பணிகள் மற்றும் இதர உபயோகங்களுக்கு கிரானைட் கழிவுகளை வழங்குவதன் மூலம் அரசுக்கு கனிசமான வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. இது தொடர்பாக நடைமுறையிலுள்ள தமிழ்நாடு சிறுகனிம சலுகை

விதிகள் 1959-ல் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளது.

### 1.8.6 நிலையான சுரங்கக் கொள்கை மற்றும் எம். சேண்ட் (M-SAND) தயாரிப்பு கொள்கை உருவாக்குதல்

சுற்றுப்புறம் மற்றும் இயற்கை சூழலுக்கு பாதிப்பின்றி, சுரங்கப்பணிகளை செயல்படுத்திட நீடித்த நிலையான சுரங்கக் கொள்கை ஒன்றை உருவாக்க, புவியியல் மற்றும் சுரங்கத்துறையால் வரைவு கொள்கை ஒன்று தயார் செய்யப்பட்டு வருகிறது. மாநிலத்தில், எம்-சாண்ட் தயாரிப்புத் தொழிலினை முறைப்படுத்த புதிய கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

### 1.8.7 அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் புவியியல் புதை படிவ பூங்கா அமைத்தல்

பெரம்பலூர் மாவட்டத்தில் 495.60.0 ஹெக்டர் பரப்பிலும், அரியலூர் மாவட்டத்தில் 4.01.5 ஹெக்டர்



அரசு நிலத்திலும் புவியியல் புதை படிவ பூங்கா ஒன்று அமைக்கப்பட உள்ளது. பெரம்பலூர் மாவட்டம், காரை பகுதியில் அமைந்துள்ள முக்கோண வடிவ

மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளை காரைப் படிமங்கள் என அழைக்கப்படுவதுடன் இது அழிந்து போன பன்முகத்தன்மை கொண்ட கடல்வாழ் உயிரினங்களின் அரிய உண்மைகளை எடுத்துரைக்கும் ஓர் உன்னதமான இடமாகும். இப்பாறைகளில் பாஸ்பேட்டிக் உருண்டைகள் மற்றும் தொன்மையான கடல்வாழ் நுண்ணுயிர் படிமங்களான அமோனாய்ட்ஸ், நாட்டிலஸ் மற்றும் பெலிமனைட்ஸ் போன்றவைகள் அதிகளவில் படிந்துள்ளன. எனவே இப்பகுதிகள் உலகளவிலான புவியியல் வல்லுநர்களின் ஆராய்ச்சிக் கூடமாக விளங்கி வருகின்றன. புவியின் பல்வேறு பரிணாம மாற்றங்களை பொது மக்களுக்கு விளங்க வைப்பதுடன் அப்பகுதியின் கடந்த கால புவியியல் மற்றும் சுற்றுச்சூழலின் தொன்மை குறித்து அறிந்து கொள்ளும் வாய்ப்பினை நல்குவதால் இப்பகுதியினை பேணிப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும். இப்பகுதியில் புதை படிவ பூங்கா அமைப்பது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு இறுதி நிலையில் உள்ளது.

BLANK PAGE



கடலூர் மாவட்டம், பண்ருட்டி மற்றும் அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள **9** ஊராட்சிகளுக்கு ரூ.**9.21** கோடி திட்ட மதிப்பீட்டில் கூட்டு குடிநீர் திட்டம், மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி மூலம் செயல்படுத்தப்பட்டது

**Blank page**




கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் தாலுக்கா, கார்மாங்குடி கிராமத்தில் ரூ.80 இலட்சம் திட்ட மதிப்பீட்டில்
ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டது

**Blank page**

## 2. தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம் 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. பெருங்கனிமங்கள் மற்றும் கிரானைட் உள்ளிட்ட சிறு கனிம வளங்களை கண்டறிதல் மற்றும் அவைகளை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றம் செய்து சந்தையில் விற்பதை தமிழ்நாடு கனிம நிறுவனம் தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனம் கருப்பு, வண்ண கிரானைட் கற்கள், பெருங்கனிமங்களான சுண்ணாம்புக்கல், கிராஃபைட், போன்ற கனிமங்களை அறிவியல் முறையில் வெட்டியெடுத்து முறையாக விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனம், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான கிரானைட் கற்பலகைகள், ஓடுகள், சுவர் பலகைகள், நினைவுச்சின்னங்கள் போன்றவற்றை பல்வேறு நாடுகளில் விற்பனை செய்து தனக்கென ஓர் சந்தையை உருவாக்கியுள்ளது.

## 2.1 கிரானைட்

1978 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான



கால அளவில், இந்தியாவிற்குள் கிரானைட் தொழிலில் 20 சதவீதத்திற்கு மேல் உற்பத்தி / விற்பனை செய்யும் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இருந்தது. மேலும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற கிரானைட், உலகிலேயே மிகச் சிறந்த தரம் வாய்ந்த கிரானைட் கற்களாகக் கருதப்படுகிறது.

சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதில் உள்ள கடுமையான நிபந்தனைகளின் காரணமாக, 35 கிரானைட் குவாரிகள், 2013ஆம் ஆண்டிலிருந்து 2020ஆம் ஆண்டு வரையில் படிப்படியாக



மூடப்பட்டதால், 2013–14ஆம் ஆண்டில் கிரானைட் மூலம் கிடைத்த தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூபாய் 113 கோடியிலிருந்து 2019–2020ஆம் ஆண்டில் ரூபாய் 19 கோடியாகக் குறைந்தது. தமிழ்நாடு கனிம நிறுவனம் 2021–2022ஆம் ஆண்டில், சுமார் 4,700 கன மீட்டர் கிரானைட் கற்களை உற்பத்தி செய்து

ரூபாய் 39 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் 2022–2023ஆம் நிதி ஆண்டில் அதன் வருவாயினை ரூபாய் 77 கோடியாகவும், 2023–2024ஆம் ஆண்டில் ரூபாய் 105 கோடியாகவும் அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.

## 2.1 கிராபைட்

உயர்வெப்ப நிலைத்தன்மை, வேதியியல் வினைக்கு எதிர்ச்செயலற்ற தன்மை, உயர்மின் ஆற்றல் மற்றும் வெப்ப ஆற்றல் ஊடு கடத்தும் தன்மை ஆகிய பண்புகளின் காரணமாக, கிராபைட் ஒரு இன்றியமையாத பொருளாக நவீன தொழில்களில் விளங்கி வருகிறது. உலோகங்களை உருகவைக்கும் மட்கலம், வார்ப்படச்சாலை, மின்கலங்கள், மசகுப்பொருட்கள், வண்ணப்பூச்சுகள் (சாயங்கள்) மற்றும் ஏனைய உயர்நிலை பயன்பாடுகள் அடங்கிய தொழில்களில் கிராபைட் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது.





தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாட்டில் உள்ள சிவகங்கை மாவட்டத்தில் ஒரு தொழிற்பிரிவை உருவாக்கி,

1994ஆம் ஆண்டிலிருந்து 84 சதவீதம் முதல் 96 சதவீதம் வரை நிலைப்படுத்தப்பட்ட கார்பன் உள்ள கிராபைட் செதில்களை தயாரித்து வருகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனம் 2021–2022–ஆம் ஆண்டில் 5,700 மெட்ரிக் டன் கிராபைட் செதில்களை தயாரித்து ரூபாய் 19 கோடி அளவுக்கு விற்பனை வருவாய் ஈட்டியுள்ளது. கிராபைட் செதில்களின் உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பங்கு, சுமார் 30 சதவீதமாகும்.

## 2.3 கடற்கரை மணல்

கடற்கரை கனிமங்களை வெட்டியெடுத்தல், செய்முறைப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றுக்காக ஒரு கூட்டுத் தொழில் நிறுவனத்தை ஏற்படுத்தும் பொருட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக தமிழ்நாடு கனிம நிறுவனம் இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் (IREL) நிறுவனத்துடன் முனைப்பான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 1,500 கோடி வருவாய் ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் சாத்தான்குளத்திலும், குதிரைமொழியிலும் கனிமம்



வெட்டியெடுக்குமிடங்களை தமிழ்நாடு கனிம நிறுவனம் கண்டறிந்துள்ளது.

### 2.4 சிலிக்கா மணல்

சிமெண்டை சோதனை செய்வதற்காக இந்தியாவிலுள்ள அனைத்து சிமெண்ட் ஆலைகளுக்கும் இந்திய தரமணலை (IS 650: 1991 தரச்சான்றின்படி) வழங்குவதற்கு BIS–யினால்



அனுமதியளிக்கப்பட்டுள்ள ஒரே தயாரிப்பு நிறுவனம், தமிழ்நாடு கனிம நிறுவனமாகும். சிலிக்கா மணல், செங்கல்பட்டு மாவட்டம் முதலியார்குப்பம் சுரங்கத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு சென்னை மாவட்டம், எண்ணூரில் உள்ள இந்தியத் தரமணல் பிரிவில் சுத்திகரிக்கப்படுகிறது.

### 2.5 எம்–சாண்ட்

எம்–சாண்ட் ஆலையை அமைப்பதற்காக, எம்–சாண்ட் உற்பத்திக்கு மிகவும் உகந்ததாக உள்ள சார்னோகைட் கனிமத்தை இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலியில் 90 ஹெக்டேர் பரப்பில் தமிழ்நாடு கனிம நிறுவனம் தெரிவு செய்துள்ளது.

## 2.6 சுரங்க குத்தகை விவரம்

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு நடைமுறையில் 17 சுரங்க குத்தகைகள் உள்ளன. அதன் விவரங்கள் கீழ்கண்டவாறு:–

| வ. எண் | கனிம வகைகள் | சுரங்க குத்தகை எண்ணிக்கை | பரப்பளவு (ஹெக்டேர்) |
|---|---|---|---|
| 1 | கருப்பு கிரானைட் | 10 | 287.93.5 |
| 2 | பலவண்ண கிரானைட் | 03 | 30.13.0 |
| 3 | சிறுகனிமங்கள் (கிரானைட் நீங்கலாக) | 01 | 2.77.0 |
| 4 | பெருங்கனிமங்கள் | 03 | 270.50.5 |
| | மொத்தம் | 17 | 591.34.0 |

## 2.7 உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் 2021–2022

| கனிமங்களின் விவரம் | உற்பத்தி | விற்பனை | |
|---|---|---|---|
| | | அளவு | ரூபாய் இலட்சத்தில் |
| **1. கிரானைட் கற்துண்டங்கள் – க.மீ** | | | |
| (அ) கருப்பு கிரானைட் கற்துண்டங்கள் | 3,065 க.மீ | 4,119 க.மீ | 3,607.85 |
| (ஆ) பல வண்ண கிரானைட் கற்துண்டங்கள் | 1,620 க.மீ | 1,462 க.மீ | 298.12 |
| **2. பெருங்கனிமங்கள்** | 1,47,000 மெ.டன் | 88,749 மெ.டன் | 1,024.95 |
| **3. மதிப்பு கூட்டிய பொருள்கள்** | | | |
| (அ) கிரானைட் பலகைகள் | – | 3,400 ச.மீ | 46.62 |
| (ஆ) கிராபைட் செதில்கள் | 5,750 மெ.டன் | 5,745 மெ.டன் | 1,862.53 |
| (இ) இந்திய தர மணல் | 1,500 மெ.டன் | 1,177 மெ.டன் | 391.43 |
| (ஈ) விரிவாக்கப்பட்ட வெர்மிகுலைட் | 600 மெ.டன் | 561 மெ.டன் | 86.40 |
| (உ) மற்றவைகள் (கிராபிபேவர்ஸ் மற்றும் வெர்மிகுலைட்ஸ்) | – | – | 68.44 |
| | | **மொத்தம்** | **7,386.34** |

தமிழ்நாடு கனிம நிறுவனம் 2021–2022 நிதியாண்டில் ரூபாய் 74 கோடி விற்பனை வருவாயை ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் 2022–2023 நிதியாண்டில் ரூபாய் 126 கோடி விற்பனை வருவாயும், ரூபாய் 8 கோடி இலாபமும் ஈட்ட திட்டமிட்டுள்ளது.

## 2.8 செயல் திட்டம் 2022–2023

2022–23 நிதியாண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனைத் திட்டம் பின்வருமாறு:

| கனிமங்களின் விவரம் | வரவு செலவு மதிப்பீடு– 2022–2023 | | |
|---|---|---|---|
| | உற்பத்தி | விற்பனை | |
| | | அளவு | ரூபாய் இலட்சத்தில் |
| **1. கிரானைட் கற்துண்டங்கள் – க.மீ** | | | |
| (அ) கருப்பு கிரானைட் கற்துண்டங்கள் | 10,954 க.மீ | 9,810 க.மீ | 6,804.60 |
| (ஆ) பல வண்ண கிரானைட் கற்துண்டங்கள் | 5,550 க.மீ | 5,225 க.மீ | 853.20 |
| **2. பெருங்கனிமங்கள்** | 1,89,044 மெ.டன் | 1,15,844 மெ.டன் | 1,050.00 |
| **3. மதிப்பு கூட்டிய பொருள்கள்** | | | |
| (அ) கிரானைட் பலகைகள் | – | 51,000 ச.மீ | 477.50 |
| (ஆ) கிராபைட் செதில்கள் | 7,000 மெ.டன் | 6,000 மெ.டன் | 2,220.00 |
| (இ) இந்திய தர மணல் | 2,400 மெ.டன் | 2,400 மெ.டன் | 1,032.00 |
| (ஈ) விரிவாக்கப்பட்ட வெர்மிகுலைட் | 1,200 மெ.டன் | 1,080 மெ.டன் | 172.80 |
| | | **மொத்தம்** | **12,610.10** |

2.9 புதிய முயற்சிகள்

- தமிழ்நாடு கனிம நிறுவனம் 8 சுரங்கத் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற்றுள்ளது மற்றும் 2020–2021 நிதியாண்டில் செயல்பாட்டில் உள்ள சுரங்கங்கள் மற்றும் குவாரிகளின் எண்ணிக்கையை 9–லிருந்து, 2021–2022 நிதியாண்டில் 17 ஆக உயர்த்தியுள்ளது. 2022–2023 ஆம் ஆண்டில் மேலும் 7 குவாரிகள், சுரங்கங்களுக்கான சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற்று குவாரிகளின் செயல்பாட்டினை அதிகரிக்க தமிழ்நாடு கனிம நிறுவனம் முயன்று வருகிறது.
- திருச்சி மாவட்டத்திலுள்ள மேலரசூர், அரியலூர் மாவட்டத்திலுள்ள ரெட்டிபாளையம், கரூர் மாவட்டத்திலுள்ள தென்னிலை ஆகிய இடங்களில் 3 சுண்ணாம்புக் கற்கள் உள்ள பகுதிகளை தமிழ்நாடு கனிம நிறுவனம் கண்டறிந்துள்ளது மற்றும் இந்த இடங்களை இந்நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

- தமிழ்நாடு கனிம நிறுவனம், தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளை (NMET) தொகையிலிருந்து நிதி ஆதாரம் பெற்று ஆய்வு மேற்கொள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2022-2023 நிதியாண்டில் சுண்ணாம்புக் கற்கள் கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- தமிழ்நாடு கனிம நிறுவனம் நவீன DGPS அளவை கருவியை ரூபாய் 19,27,530/-க்கு வாங்கியுள்ளது. இக்கருவியை பயன்படுத்தி புதிய சுரங்கச் சட்டத்தின்படி சுரங்கங்கள், குவாரிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தற்போதைய கையேடு கோப்பு முறையிலிருந்து மின் அலுவலக அமைப்புக்கு மாறுவதற்கு தமிழ்நாடு கனிம நிறுவனம் முயன்று வருகிறது.

## 3. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனமாக தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனம் 1979ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. குரும்பம்பட்டி காப்புக்காட்டு பகுதியில் 96.34 ஹெக்டேர் பரப்புடைய சுரங்க குத்தகை அரசிடம் இருந்து இந்நிறுவனம் பெற்றுள்ளது. சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை அமைச்சகத்தின் கடித எண்.Z–11013/89/2017–IA.II2(M), நாள்: 12.4.2018ன்படி, TANMAG நிறுவனத்தின் சுரங்க நடவடிக்கைகளை 14.4.2018 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. 13.4.2018 அன்று சுற்றுச்சூழல் அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டது.

மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) 14.10.2020 அன்று சுற்றுச்சூழல் அனுமதியை (EC) வழங்கியது. இதையடுத்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் 10.11.2020 அன்று சுரங்கங்களை இயக்க ஒப்புதல் அளித்தது. நிறுவனம் மீண்டும் 19.11.2020 அன்று சுரங்கப் பணியை தொடங்கியது. இந்திய சுரங்க பணியகம் (IBM) அங்கீகரித்த சுரங்கத் திட்டத்தின் படி 5 ஆண்டுகளில் 6,00,590 மெ.டன் மேக்னசைட் மற்றும் 5,67,077மெ.டன் டூனைட் உற்பத்தி செய்ய சுற்றுச்சூழல் அனுமதியில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதியாண்டும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து சுரங்கத்தை இயக்க அனுமதி பெறப்படுகிறது.

சுரங்கம் 5 மீட்டர் ஆழத்திற்கு கீழ் இயங்கக் கூடாது என்ற தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் கட்டுப்பாட்டினால்

(i) சுரங்க செயல்பாடுகளின் பரப்பு 96 ஹெக்டேரிலிருந்து 3 ஹெக்டேராக குறைந்துள்ளது.

(ii) சுரங்க செயல்பாடுகள் மேற்பரப்பு பகுதியில் மட்டும் செயல்படுவதால் கச்சாமேக்னசைட் மீட்பு விகிதம் 6 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைந்துள்ளது.

எனவே எதிர்பார்த்த அளவு உற்பத்தியை எட்ட இயலவில்லை.

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 100/– மதிப்புள்ள 50 லட்சம் பங்குகள் கொண்ட ரூபாய் 50 கோடி ஆகும். செலுத்தப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் ரூபாய் 100/– மதிப்புள்ள 16,65,000 பங்குகள் கொண்ட ரூபாய் 16.65 கோடி ஆகும்.

## 3.1 செயல்பாடுகள்

திறந்த வெளி சுரங்க முறையில் தகுதியுள்ள அனுபவமிக்க பணியாளர்கள் மற்றும் பகுதி இயந்திரங்களை கொண்டு (Semi Machanised) கச்சா மேக்னசைட் வெட்டி எடுக்கும் பணியில் டேன்மேக் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இந்நிறுவனம் நவீன முறையில் விஞ்ஞான ரீதியாக சுற்றுச் சூழலைப் பாதுகாத்து கனிமத்தை வெட்டி எடுக்கின்றது. மேக்னசைட்டை தோண்டி எடுக்கும்போது டூனைட் என்ற கனிமமும் துணை தாதுவாக கிடைக்கின்றது.

கச்சா மேக்னசைட் சுரங்க முறையானது இடத்தை தேர்வு செய்தல் துளையிடுதல், வெடி வைத்தல், எடுத்தல், வரிசைப்படுத்துதல், அடுக்கி வைத்தல், கழிவுகளைஅகற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கியது. இந்நிறுவனம், சுரங்கப் பிரிவு (Mines Division), சுழற்சூளைப் பிரிவு (Rotary Kiln Division) மற்றும் நிலைச்சூளைப்பிரிவு (Shaft Kiln Division)ஆகிய மூன்று பிரிவுகளை கொண்டுள்ளது.

## 3.2 உற்பத்திபொருட்கள்

சுரங்கத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கச்சா மேக்னசைட் முழுவதும் தனது சுழற்சூளைப் பிரிவு (Rotary Kiln Division) மற்றும் நிலைச்சூளைப் பிரிவு (Shaft Kiln Division) ஆகிய இரு தொழிற்சாலைகளில்

மூலப் பொருளாகக் கொண்டு முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Dead Burnt Magnesite) மற்றும் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Lightly Calcined Magnesite) பொருட்கள் தயாரிக்கப்படுகின்றது. மேக்னசைட் தோண்டி எடுக்கும் போது கிடைக்கும் டூனைட் வாடிக்கையாளர்களுக்கு நேரிடையாக விற்கப் படுகிறது.

**3.3 நிலைச் சூளைப்பிரிவு (Shaft Kiln Division)**

டேன்மேக் நிலைச் சூளைப் பிரிவில் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Lightly Calcined Magnesite) அதன் 5 நிலைச் சூளைப் பிரிவில் உற்பத்தி செய்கின்றது. இப்பிரிவின் நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 20,000 மெ.டன்னாகும். $1000^{0}C$ முதல் $1100^{0}C$ யில் சூளையில் வெப்பப்படுத்தப்பட்டு ஊது உலை எண்ணெயை (Furnace Oil) எரிபொருளாகக் கொண்டு இரசாயன எதிர்வினை மூலம் மித எரியுட்டப்பட்ட மேக்னசைட் (calcination process) தயாரிக்கப்படுகின்றது.

**3.4 சுழற் சூளைப் பிரிவு (Rotary Kiln Division)**

டேன்மேக் நிறுவனம் நவீன சுழற் சூளைப் பிரிவில் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் (DBM) உற்பத்தி செய்கின்றது. (M/s.F.L.Smith and Co., Denmarkஆல் வழங்கப்பட்டு நிறுவப்பட்டது). இதன்

நிறுவப்பட்ட உற்பத்தி திறன் ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் ஆகும். இது 1985 டிசம்பரில் தொடங்கப்பட்டது. $1750^0C$ யில் சூளையில் வெப்பப்படுத்தப்பட்டு ஊது உலை எண்ணெயை (Furnace Oil) / LSHS Oil எரி பொருளாகக் கொண்டு முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்கப்படுகின்றது.

### 3.5 புதிய முயற்சிகள்

டேன்மேக் சுரங்கம் மற்றும் தொழிற்சாலைகளின் செயல் திறனை மேம்படுத்துதல் மற்றும் உலை எண்ணெய்க்கான மாற்று எரிபொருளைப் பயன்படுத்துதல் தொடர்பாக புவனேஸ்வரில் உள்ள CSIR–IMMT உதவியுடன் ஆய்வு செய்ய நடிவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

### 3.6 கழிவு மண் திட்டுகளிலிருந்து கச்சாமேக்னசைட் மீட்டெடுப்பு

கச்சா மேக்னசைட் கட்டிகள் மற்றும் 1" அளவுக்கு மேல் உள்ள சிறிய கனிமங்களை கைமுறையாக எடுத்து சேகரிக்கப்படுகிறது. கழிவு பொருட்களுடன் உள்ள 1"க்கும் குறைவானது மற்றும் துகள் கச்சா மேக்னசைட் மீட்டெடுத்தல் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கழிவு மண் திட்டுகளிலிருந்து சுமார் 15 சதவீதம் கச்சா மேக்னசைட் மீட்டெடுக்கப்படும்.

## 3.7 2021–22ஆம் ஆண்டில் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

| விவரங்கள் | அளவு (மெ.டன்) | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| **உற்பத்தி** | | |
| கச்சாமேக்னசைட் | 30,800 | |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 4,500 | |
| மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 6,750 | |
| டூனைட் | 42,000 | |
| **விற்பனை** | | |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 2,118 | 660.00 |
| மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 6,750 | 2,286.00 |
| டூனைட் | 43,660 | 2,755.00 |
| மற்றவை (RMD & SCD etc.,) | | 150.00 |
| கச்சாமேக்னசைட் சுரங்கத்திலிருந்து – சுழற்சூளைப் பிரிவுக்கு | 20,533 | |
| கச்சாமேக்னசைட் சுரங்கத்திலிருந்து– நிலைச்சூளைப்பிரிவுக்கு | 10,267 | |
| கச்சாமேக்னசைட் சுழற்சூளைப்பிரிவிலிருந்து – நிலைச் சூளைப் பிரிவுக்கு | 4,498 | |
| **மொத்த விற்றுமுதல்** | | **5,851.00** |
| இதர வருவாய் | | 164.24 |
| மொத்த வருவாய் | | **6,015.24** |
| **மதிப்பிடப்பட்டுள்ள வரிக்கு முந்தைய இலாபம்** | | **1,092.56** |

## 3.8 2022–23 மற்றும் 2023–24ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

2022–23 மற்றும் 2023–24ஆம் ஆண்டுகளுக்கான உத்தேச உற்பத்தி மற்றும் விற்பனை இலக்குகள் பின்வருமாறு:

| விவரம் | 2022–23 | | | 2023–24 | | |
|---|---|---|---|---|---|---|
| | உற்பத்தி | விற்பனை | | உற்பத்தி | விற்பனை | |
| | அளவு மெ. டன் | அளவு மெ. டன் | ரூபாய் இலட்சத்தில் | அளவு மெ. டன் | அளவு மெ. டன் | ரூபாய் இலட்சத்தில் |
| கச்சா மேக்னசைட்* | 60,000 | சொந்த பயன்பாட்டிற்காக | | 1,20,000 | சொந்த பயன்பாட்டிற்காக | |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 14,800 | 13,000 | 4,550.00 | 30,000 | 30,000 | 10,500.00 |
| மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 9,000 | 6,000 | 1,800.00 | 17,000 | 17,000 | 5,100.00 |
| டூனைட் | 80,000 | 80,000 | 4,880.00 | 1,20,000 | 80,000 | 4,880.00 |
| மற்றவை | | | 165.00 | | 5,000 | 275.00 |
| இதரவருவாய் | | | 196.30 | | | 215.00 |
| மொத்தவருவாய் | | | **11,591.30** | | | **20,970.00** |

*மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார குறிப்பு மையத்திடமிருந்து தடையில்லா சான்று பெற்ற பிறகு

**துரைமுருகன்**
**நீர்வளத் துறை அமைச்சர்**